செ.வெ.எண். 269/2009(செமதொஅ) நாள் : 31.08.2009.

## 16 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு ரூ.24 ஆயிரம் கோடி கல்விக் கடனாக வழங்கப்பட்டுள்ளது - மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்கள் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் சார்பில் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா காவல் அரங்கில் கல்விக் கடன் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்கள் கலந்து கொண்டு கல்விக் கடன் முகாமினை குத்துவிளக்கேற்றி வைத்து தொடங்கி வைத்து, 175 மாணவ மாணவிகளுக்கு கல்விக் கடனுக்கான காசோலைகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

“ நமது மத்திய அரசின் கொள்கைகள் நிறைவேறவே கல்விக் கடன் முகாம் நடத்தப்படுகிறது. இதன் அடையாளமாக இன்று 175 மாணவ, மாணவிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பிலான கல்விக் கடன் வழங்கப்படுகிறது. கல்விக் கடன் வழங்கும் செய்தி மாவட்டம் முழுவதும் பரவிட வேண்டும். தகுதியான மாணவர்களிடத்தில் நமக்கு கல்விக் கடன் கிடைக்கும் என்ற விதையினை விதைக்க வேண்டும். வருமானம், சொத்து இல்லாமல் ஏழ்மை நிலையில் இருந்தாலும் நமது குழந்தைகளின் உயர்கல்விக்கு மத்திய அரசு துணையாக இருக்கும் என்ற நம்பிக்கையினை பெற்றோர்களிடத்தில் விதைக்க வேண்டும். தகுதியான மாணவ, மாணவியருக்கு தரமான கல்லூரியில் இடம் கிடைத்து விட்டால் அவர்களுக்கு கல்விக் கடன் கட்டாயம் வழங்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

நாட்டின் மிகப்பெரிய செல்வம் மனித வளம். முன்பு அது சுமையாக இருந்தது. இன்று அதே மனித வளம் நமது நாட்டிற்கு பயன்படுவது மட்டுமின்றி பல நாடுகளுக்கும் பயன்படுகிறது. பல நாடுகளில் மருத்துவர்கள், பேராசிரியர்கள், பொறியியல் வல்லுநர்கள், மேலாண்மை வல்லுநர்கள் நமது நாட்டில் படித்து வெளிநாடுகளில் வளம் சேர்க்கிறார்கள். மனித வளம் பட்டை தீட்டப்படாத வைரம். அது கல்வி மூலம் பட்டை தீட்டப்படுகிறது. அடிப்படைக் கல்வி, பள்ளிக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி மிக முக்கியமாகும். உயர்கல்வி பயில இடம் கிடைப்பது அரியதாகும். நமது நாட்டில் 100ல் 50 பேர் தான் பள்ளிக் கல்வியை முடிக்கிறார்கள். அதிலும் 5 பேர்தான் கல்லூரி கல்வி வரை செல்கின்றனர். அகில இந்திய அளவில் 11 சதவீத பேருக்கு தான் உயர்கல்வி கிடைக்கிறது. அத்தகைய அரிய வாய்ப்பான உயர்கல்வி கிடைத்த உங்களுக்கு வறுமை, வருமானமின்மை போன்ற காரணங்களால் அது கைநழுவி போய்விடக் கூடாது. இதற்கு உயர்கல்வி கிடைத்த அனைவருக்கும் கல்விக் கடன் கிடைத்திட வேண்டும். கல்விக் கடனானது கடந்த 5 ஆண்டுகளில் பல மடங்கு விரிவடைந்துள்ளது. கடந்த 31.03.2009 வரை நாடு முழுவதும 16 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு ரூ.24 ஆயிரம் கோடி கல்விக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் எண்ணிக்கையும் கூடும். கல்விக் கடன் தொகையும் கூடும். இன்னும் 5 ஆண்டுகளில் ரூ.50 ஆயிரம் கோடியை எட்டும்.

வங்கிகளின் தேவையில்லாத விதிமுறைகள், சில வங்கிகள் தாங்களாகவே நிர்ணயிக்கும் உச்சவரம்பு மற்றும் படிக்கின்ற காலத்தில் கடனுக்கான வட்டியினை செலுத்த வேண்டுமே என்ற அச்சம் போன்ற காரணங்களினால் கல்விக் கடன் வாங்க பலர் முன்வருவதில்லை. கடந்த வாரம் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் கல்விக் கடனுக்கான வட்டியினை படிக்கிற காலத்தில் அது 3 ஆண்டாக இருந்தாலும் சரி, 4 ஆண்டாக இருந்தாலும் அல்லது 5 ஆண்டாக இருந்தாலும் சரி படிப்பை தொடங்கியது முதல் முடித்து 6 மாதங்கள் வரை வட்டி கிடையாது என்ற புரட்சிகரமான திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாத வருமானம் ரூ.35 ஆயிரம் மற்றும் அதற்கும் கீழுள்ள, ஆண்டு வருமானம் ரூ.4.5 லட்சம் மற்றும் அதற்கும் கீழ் வருமானம் உள்ளவர்கள் பயன் பெறலாம். இதன் மூலம் 5 லட்சம் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

எனக்கு தகுதி கல்வி. எனது மகனுக்கு தகுதி கல்வி. அந்த கல்வி உங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். பிறப்பு, சாதி, மத பாகுபாடுகளால் ஒருவருக்கு உயர்கல்வி மறுக்கப்படக் கூடாது. அரிய வரமான உயர்கல்வி பெற புதிய கல்லூரிகள் மற்றும் அதிக எண்ணிக்கையில் இடங்கள், புதிய பல்கலைகழகங்கள், மத்திய பல்கலைகழகங்கள் என கல்வி வாய்ப்புகள் பெருகி வருகின்றன. கல்வி கற்பதற்கு ஊக்கத் தொகைகள் வழங்கப்படுகின்றன. கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இம்மூன்றும் அறிவு சார்ந்தவைகளாகும். இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் நமது நாடு அறிவு சார்ந்த நாடாக மாறும்.” என்று தெரிவித்தார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் சிறப்புரையாற்றியதாவது, “ காஞ்சிபுரம் மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டமாகும். இங்கு 70 மேற்பட்ட கல்லூரிகள் உள்ளன. தொழிற்துறையில் சிறந்த மாவட்டமாகவும் திகழ்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மக்கள் கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகளை மத்திய, மாநில அரசுகள் நடத்தி வருகின்றன. தமிழக அரசு புதிய கல்லூரிகளும், கல்லூரிகளில் அதிக இடங்களையும், எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு தேவையான வசதிகளையும செய்து வருகிறது. கடந்த ஆட்சி காலத்தில் பணி நியமனத் தடையாணையால் 3.5 இலட்சம் அரசு காலிப் பணியிங்கள் நிரப்பப்படாமல் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின் தடையாணை நீக்கப்பட்டு 3 இலட்சம் அரசு காலிப் பணியிடங்கள் நிரப்பட்டுள்ளன. மாணவ சமுதாயத்திற்கு பல்வேறு சலுகைகளை மாண்புமிகு இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலான மத்திய அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அரசும் வழங்கி வருகின்றன. வங்கி நிர்வாகம் 1000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளின் ஏக்கத்தினை போக்கி அவர்கள் அனைவருக்கும் கல்விக் கடன் வழங்கி உதவிட வேண்டும். நமது மாவட்டம் மிக சிறப்பான வளர்ச்சி பெற, மாணவர்களின் எதிர்காலம் வளர துணை நிற்போம்.” என்று தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். “காஞ்சிபுரம் கலைகளின் தலைநகரம் என்பார்கள். இது கல்விக்கும் தலைநகரம் என்ற பெருமையை பெற்றிருக்கிறது. வரலாற்று ரீதியாக பார்த்தால் வடநாட்டிலுள்ள நாலந்தா பல்கலைகழகத்தில் பேராசிரியர்களாக இருந்த தம்பாலர் போன்றோர் காஞ்சிபுரத்திலிருந்து சென்றவர்கள். அதுபோலவே காஞ்சிபுரத்திலிருந்த கல்வி நிலையங்களில் வட பகுதியை சேர்ந்தவர்கள் பேராசிரியர்களாக பணிபுரிந்தார்கள். அந்த அளவிற்கு காஞ்சிபுரம் கல்வியில் சிறந்த இடத்தை முன்பும் பெற்றிருந்தது. இப்போதும் பெற்றுள்ளது.இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கடனை வழங்குவது அவருக்கு வருங்கால சமுதாயத்தின் மீதுள்ள பாசத்தையும், பெருந்தன்மையையும் காட்டுகிறது. அதற்காக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் உள்ள மாவட்டம். இங்குள்ள தொழிற்சாலைகளில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகி கொண்டே உள்ளது. எனவே வங்கியாளர்கள் தருகின்ற கல்விக் கடனை வாங்கும் மாணவ சமுதாயம் திருப்பி செலுத்துவதற்கான வசதியினை நிச்சயம் பெறுவார்கள். அவர்கள் மீது எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் நாணயம் மிக்கவர்கள். தன்னம்பிக்கை மிக்கவர்கள். நீங்கள் அவர்களுக்கு தாராளமாக கடனை தரலாம். ஏன் என்றால் மாநிலத்திலேயே அதிக எண்ணிக்கையில் அதாவது 23,761 சுய உதவிக் குழுக்கள் செயல்படுகின்ற மாவட்டம் நமது மாவட்டம். அவர்கள் வங்கியில் சேமித்துள்ள தொகை ரூ.130 கோடி. வங்கிகள் அந்த குழுக்களுக்கு கடனாக வழங்கிய தொகை ரூ.205 கோடி. இந்த கடனை வாங்கிய எங்கள் மாவட்ட சுய உதவிக் குழு பெண்கள் எல்லாம் வாங்கிய கடனை நாணயமாக திருப்பி செலுத்துகிறார்கள். அதனால் தான் வங்கியாளர்கள் அவர்களை தேடி, தேடிச் சென்று கடனை தருகிறார்கள். அதே போன்ற நாணயம் இந்த மாணவ சமுதாயத்திற்கும் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்த விழாவில் 175 மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கடன் வழங்கப்பட உள்ளது. இந்த கடனை பெறுகின்றவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு படித்து, அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற வேண்டும். மனித உடலுக்கு ரத்தம் எவ்வளவு அவசியமோ அதுபோல தொழில் வளர்ச்சிக்கு பணம் அவசியமாகும். அந்த முதலீட்டையும் வங்கியாளர்கள் வழங்கி வருகிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் நலிந்தோர் கடனாக ரூ.200 கோடியும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ரூ.174 கோடியும் தொழில் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.” என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பெ.விசுவநாதன் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் இந்தியன் வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.சுந்தர்ராஜன் வரவேற்றார். நிறைவாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் திரு.ஜி.நாராயணன் நன்றி கூறினார். கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர், திரு.எஸ.ஆர்.ராஜா, திருமதி.யசோதா, திருமதி.சக்தி பெ.கமலாம்பாள், திருமதி.சங்கரி நாராயணன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி, காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவர் திரு.வி.ராஜேந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வங்கி அலுவலர்கள், அரசுத்துறை அலுவலர்கள், கல்லூரி மாணவ,மாணவியர், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

அனைத்து பொதுத்துறை வங்கிகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு அவ்வங்கியின் அலுவலர்கள் மாணவ, மாணவிகளுக்கு வங்கிக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களை வழங்கி, அது சம்மந்தமான வழிமுறைகள் மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் எடுத்துரைத்தனர்.




செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.